**வரையறுக்கப்பட்ட லங்கா சலுசல கம்பனியின் கொடுக்கல் வாங்கல் அறிக்கை - 2023/2024**

---

வரையறுக்கப்பட்ட லங்கா சலுசல கம்பனியின் 2024 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கருதுகின்ற கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் ஆளுனர் தரப்பினரினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனத்தால் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் காலரீதியில் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம், செலவினம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரகாரம் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 16(2) இன் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கின்ற வகையில் காலஎல்லையில் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேர காலத்தில் தயாரிப்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கணக்காணித்துக் கொள்ளல் வேண்டும்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டு வழிகாட்டியின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய கம்பனியின் நிர்வாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட 2010/2011 நிதி ஆண்டு முதல் 2023/2024 நிதி ஆண்டு வரையான நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன இந்த அறிக்கை திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2 சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம்**

கம்பனியால் இறுதியாக தயாரித்த 2010 மார்ச் 31 இல் முடிவடைந்த கணக்காண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **நிதிக்கூற்றுக்களின் விடயங்கள்** | **பெறுமதி** |
|---|---|
| | ரூபா |
| **<u>சொத்துக்கள்</u>** | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 25,872,950 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 249,749,110 |
| | --------------- |
| மொத்த சொத்துக்கள் | ,275 622,060 |
| | ======== |
| **பொறுப்புக்கள் மற்றும் உரிமை மூலதனம்** | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 600,227,603 |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | 42,756,078 |
| மூலதனம் மற்றும் ஒதுக்கம் | (367,361,621) |
| | ----------------- |
| மொத்த பொறுப்புக்கள் மற்றும் உரிமை மூலதனம் | 275,622,060 |
| | ========== |
| மொத்த வருமானம் | 231,205,038 |
| மொத்த செலவினம் | (150,993,210) |
| | -------------- |
| **ஆண்டின் இலாபம்** | 80,211,828 |
| | ========= |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 கம்பனியின் தொடர்ச்சியான இருப்பு

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2010 மார்ச் 31 இல் உள்ளவாறு கம்பனியில் காணப்பட்ட மொத்த சொத்துக்களைப் போன்று இரண்டு மடங்கை விட அதிக அளவில் பொறுப்புக்கள் காணப்பட்டதுடன் நடைமுறைச் சொத்துக்களை விஞ்சிய நடைமுறைப் பொறுப்புக்களின் அளவு ரூபா 350,478,493 ஆகும். அதன் பிரகாரம் நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு அச்சுறுத்தலுக்கு உட்பட்டிருந்த போதிலும் முகாமைத்துவம் அதற்காக போதியளவில் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கம்பனியின் தொடர்ச்சியான இருப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கம்பனியால் இறுதித் தடவையாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2010 மார்ச் 31 ஆந் திகதியில் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | தொழிற்படு மூலதனம் முகாமைத்துவம் செய்யப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | முடிவடைந்த ஆண்டின் போது காணி ஆதனங்கள் விற்பனையிலிருந்து கிடைத்த ரூபா 83,633,328 இலாபத்துடன் ரூபா 80,211,829 இலாபம் பெறப்பட்டிருந்தது. எனினும் 2010 மார்ச் 31 ஆந் திகதியில் தொழிற்படு மூலதனம் ரூபா 350,478,493 மறைப் பெறுமதியைக் கொண்டிருந்தது. அதன் பிரகாரம் கம்பனிச் சட்டத்தின் 220 ஆம் பிரிவின் பிரகாரம் பணிப்பாளர் சபையினால் கம்பனியின் தொடர்ச்சியான இருப்பை பாதுகாப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | வேண்டும். |

**3.2 கணக்குப் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிச்செல்லல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தையல் பிரிவிற்கு கிடைக்கின்ற கட்டளைகள் மற்றும் பூர்த்திசெய்யப்பட்ட கட்டளை தொடர்பா அறிக்கை, இருப்புப் பெறுவனவு மற்றும் விநியோகித்தல் அறிக்கையிடுகின்ற பதிவேடு என்பன நீண்ட காலம் முதல் நாளதுவரையாக பேணிச் செல்லப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இருப்புப் பெறுவனவு மற்றும் விநியோகித்தல் அறிக்கையிடுகின்ற பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ஆ) | மொத்த இருப்பு கொள்வனவு மற்றும் விற்பனை தொடர்பான பதிவேடு, கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடு, பொருட் பதிவேடு, வாடகைப் பதிவேடு மற்றும் நிலையான சொத்துப் பதிவேடு என்பன நீண்ட காலம் முதல் பேணிச் செல்லப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இருப்பு கொள்வனவு மற்றும் விற்பனை தொடர்பான பதிவேடு, கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடு போன்ற தேவையான ஏனைய பதிவேடுகள் முறையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (இ) | காசேடு, பேரேட்டுக் கணக்குகள் மற்றும் வங்கி இணக்கக்கூற்று அறிக்கை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் 2024 | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சகல கொடுக்கல் வாங்கல்களும் நிதித் தகவல் முறைமையில் உள்ளடக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏப்ரல் முதல் உரிய சகல கொடுக்கல் வாங்கல்களும் நிதித் தகவல் முறைமையில் உள்ளடக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்படவில்லை. | | கணக்காய்விற்காக தேவையான பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் தாமதமின்றி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த அம்பாறை, அனுராதபுரம், அங்குணகொலபெலஸ்ஸ, கொத்தட்டுவ மற்றும் பதுளை பிரதேசங்களில் காணப்படுகின்ற காணி மற்றும் கட்டிடங்களுக்கு உரிய கம்பனியால் செலுத்த வேண்டிய நிலுவை வாடகை மற்றும் ஆதன வரி எவ்வளவு என இனங்காண்பதற்குரிய பதிவேடுகள் பேணிச் செல்லப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிலுவை வாடகை சரியாக இனங்காணக்கூடிய வகையில் பதிவேடுகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |

**3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம் | | | |
| (i) | 131(1) ஆம் பிரிவு | கம்பனியால் 2014 முதல் 10 வருட வருடாந்த அறிக்கை (படிவ இலக்கம் 15) கம்பனிப் பதிவாளருக்கு கையளித்தல் புறக் கணிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | கம்பனிச் சட்டத்தின் பிரகாரம் வருடாந்த அறிக்கை கம்பனிப் பதிவாளருக்கு கையளித்தல் வேண்டும். |
| (ii) | 170(1) ஆம் பிரிவு | 2024 ஆம் ஆண்டு முதல் அதாவது தொடர்ச்சியாக 20 வருடங்களின் கணக்காய்வு அறிக்கையுடன் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கம்பனிப் பதிவாளருக்கு பதிவு செய்வதற்காக | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | கம்பனி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் பதிவு செய்வதற்காக கம்பனிப் பதிவாளருக்கு பதிவளிக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கையளிக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 21 ஆம் பிரிவு | கம்பனியின் விற்பனைகளுக்குரிய 2023/2024 கணக்காண்டில் அறவிடப்பட்ட ரூபா 776,867 மற்றும் ஏனைய ஆண்டுகளுக்குரிய பெறுமதி சேர் வரியின் அடிப்படையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்க வில்லை. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | அறவிடப்பட்ட வரித் தொகை தாமதம் இன்றி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதி இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | ஒரு சந்தர்ப்பத்தின் போது உத்தியோகத்தர் ஒருவர் பெறக் கூடியதாக உள்ள ஆகக் கூடிய முற்பண எல்லை ரூபா 100,000 ஆக இருந்த போதிலும் ரூபா 115,632 முதல் ரூபா 701,091 வரை முற்பணம் வழங்கப்பட்டிருந்த 11 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் வழங்கப்பட்ட செயல் நிமித்த உபகட்டு நிதி, முற்பணமாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக அவற்றின் கூட்டுப் பெறுமதி கையில் உள்ள காசாக காசேட்டில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | ஆகக் கூடிய எல்லையினை விஞ்சாத வகையில் முற்பணம் வழங்குவதற்கும் சரியாகக் கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படத்தப்பட்ட | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | அரசாங்கத்திற்குரிய தொழில் முயற்சிகளின் ஒன்றிணைந்த கட்டுப்பாட்டிற்கான வழிகாட்டிக் கோவையின் 2.3 மற்றும் 2.4 ஆம் பிரிவுகள் | 2023/2024 ஆம் ஆண்டிற்காக கூட்டிணைந்த திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பாதீட்டு மதிப்பீடு தயாரித்து அங்கீகரிக்கப்படாது இருந்ததுடன் கம்பனியின் பணிப்பாளரால் வழங்க வேண்டிய வெளிப்படுத்துகை பணிப்பாளர் சபையின் செயலாளருக்கு வருடாந்தம் வழங்கப்பட்டிருக்க வில்லை. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | கூட்டிணைந்த திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பாதீடு தயாரித்து அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பணிப்பாளர் வழங்க வேண்டிய வெளிப்படுத்துகைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | அரசாங்கத்திற்கு உரிய தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைநூல் | | | |
| (1) | 6.1 ஆம் பிரிவு | 2023 ஒக்தோபர் 30 ஆந் திகதி முதல் 2024 செப்தெம்பர் வரை ஒரு வருடத்திற்கு அண்ணளவான காலம் நிதி நடவடிக்கைகள் தொடர்பாக கணக்காய்வாளரின் நேரடி மேற்பார்வைகள் மேற்கொள்ளாமையின் காரணமாக சரியாகவும், நாளது வரையாகவும் நிதித் தகவல்கள் அறிக்கை இடப்பட்டிருக்க வில்லை. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | நிதி நடவடிக்கைகள் தொடர்பாக சரியான மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (2) | 6.7 ஆம் பிரிவு | நீண்ட காலம் முதல் களஞ்சியத்தில் மற்றும் தையல் பிரிவில் வருடாந்த இருப்புக்கள் மற்றும் நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்க வில்லை. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | வருடாந்தம் நிலையான சொத்துக்கள் மற்றும் இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதி 01/2020 என்ற அரச நிதிச் சுற்றறிக்கையின் II பகுதியின் 1.1.2 ஆம் பந்திக்கு உரியதாக விநியோகிக்கப்பட்ட வழிகாட்டி இலக்கம் 06 இன் 3.1 ஆம் பிரிவு | 2023/2024 ஆம் ஆண்டில் Credit/Debit Card மூலம் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,281,229 விற்பனைக்காக ரூபா 839,615 மாத்திரம் வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. மேலும் அந்த நடைமுறைக் கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த நேர் வரவு வைத்தல் ரூபா 109,322 இனங்காணப்பட்டிருக்க வில்லை. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | கம்பனியின் பெயரில் வங்கிக்கு அனுப்பப்படுகின்ற வரவு மற்றும் செலவு வைத்தல்களை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். வரவு மற்றும் செலவு தாள் கொடுக்கல் வாங்கல்கள் சரியாக வங்கிக் கணக்குகளுக்கு அறவிடப்படுகின்றமையை உறுதிப்படுத்துல் வேண்டும். |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 ஒக்தோபர் 25 ஆம் திகதிய இலக்கம் அமப/13/1459/553/012 என்ற அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அரசாங்க மதிப்பீட்டாளரின் பெறுமதி ரூபா 100 மில்லியன் ஆன ரத்மலான தெலவல வீதியில் அமைந்துள்ள கம்பனிக்குச் சொந்தமான 01 ஏக்கர் 03 றூட் 34 பேர்ச் அளவான கம்பனிக்குச் சொந்தமான காணி சட்டம் மற்றும் அமைய சமாதானம் தொடர்பான அமைச்சிற்கு அந்த ஆண்டின் போது கையளிக்கப்பட்டிருந்த போதிலும் சட்ட ரீதியாகக் கையளிக்கப்படாது இருந்ததுடன் சொத்துக்களுக்கான நிதியும் கிடைத்திருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | காணியின் உரித்தை சட்ட ரீதியாக கையளித்து பெற வேண்டிய அறவீடுகளை அறவிட்டு கொடுக்கல் வாங்கல்களை சரி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | முல்லேரியாவில் அமைந்துள்ள இரண்டு கட்டிடங்களில் ஒரு கட்டிடம் 2007 சனவரி 15 முதல் 2022 சனவரி 14 வரை தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ஆரம்பத்தின் போது மாதாந்தம் ரூபா 80,000 | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | கைச்சாத்திடப்பட்ட வாடகை உடன்படிக்கையை இரத்துச் செய்து மீண்டும் உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கட்டிடத்தை மதிப்பீடு செய்து வாடகை |

| | | | |
|---|---|---|---|
| | தொகையும், 2022 சனவரி வரை மாதாந்தம் ரூபா 117,128 தொகையும் வாடகை அறவிடப்பட்டிருந்தது. வாடகைக் காலம் முடிவடைந்து ஒன்பது மாதங்களுக்குப் பின்னர் 2022 ஒக்தோபர் 24 ஆந் திகதி முதல் மாதாந்தம் ரூபா 65,000 வீதம் 05 வருட காலத்திற்காக மீண்டும் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் வாடகை முன்னைய உடன்படிக்கையினை விட குறைத்துக் கொள்வதற்கான காரணம் வெளிப்படுத்தப்படாது இருந்ததுடன் வாடகை மதிப்பீட்டு அறிக்கையும் பெறப்பட்டிருக்க வில்லை. | | உடன்படிக்கையில் கைச்சாத்திடல் வேண்டும். 05 வருடங்கள் போன்ற நீண்ட கால உடன்படிக்கையின் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்த போதும் நட்டம் ஏற்படுகின்ற வகையில் இந்த தீர்மானத்தை அங்கீகரித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கம்பனிக்குச் சொந்தமான உணவட்டுனயில் அமைந்துள்ள கட்டிடத்துடன் உடனான 01 ஏக்கர் 30.6 பேர்ச் அளவான காணி ஒன்று லக்கசல இற்கு கையளிப்பதற்கு 2012 ஒக்தோபர் 11 ஆந் திகதி அமைச்சரவைத் தீர்மானம் எடுத்திருந்ததுடன் 2009 ஆம் ஆண்டின் போது அதன் ஆகக் குறைந்த விலை ரூபா 16 மில்லியன் ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. லக்சலயினால் அதற்காக ரூபா 15,248,575 தொகை 2012 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் ஆதனம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.<br>அவ்வாறு இருக்கும் போது புதிய மதிப்பீடு ஒன்று இன்றி 2023 ஆம் ஆண்டின் போது கம்பனியால் அந்த ஆதனம் ரூபா 25 மில்லியனுக்கு கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு விற்பனை செய்து கிடைத்த பணம் இரண்டு நிலையான வைப்புக்களில் 03 மாத காலத்திற்காக வைப்புச் செய்யப்பட்டிருந்தது. அதில் ரூபா 10,000,000 நிலையான வைப்பொன்று காலாவதியாவதற்கு முன்னர் பணிப்பாளர் சபை அங்கீகாரமும் இன்றி மீளப் பெறப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 5,000,000 சம்பளம் செலுத்துதல், துணிகளை கொள்வனவு செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | அரசாங்கத்தின் காணி விற்பனை செய்வதற்கு முன்னர் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். வெளித்தரப்பினருக்கு செலுத்த வேண்டி பணத்தைச் செலுத்தி தீர்த்து வைப்பதற்கும் நிலையான வைப்பை பணமாக்கிக் கொள்ளும் போது பணிப்பாளர் அங்கீகாரத்தைக் பெறுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கலகெதர இல் 01 ஏக்கர் 01 றூட் 39.5 பேர்ச் அளவினை உடைய காணி மற்றும் அதில் அமைந்துள்ள 03 கட்டிடங்கள் உடனான உற்பத்தி நிறுவனம் மத்திய மாகாண சபையின் கைப்பணிகள் திணைக்களத்துடன் ஒன்றிணைந்து கூட்டுமுயற்சி ஒன்றாக அமுல்படுத்துவதற்கு 2022 ஆகஸ்ட் 11 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும் 2024 மார்ச் 31 வரையிலும் அந்த உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. | உடன்படிக்கை செய்யப்பட்ட செயற்திட்டத்தை அமுல்படுத்தி வருமானத்தை உழைப்பதற்கும் சொத்துக்களை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | இரத்தினபுரியில் அமைந்துள்ள கம்பனிக்குச் சொந்தமான கட்டிடம் இரண்டு அரச கூட்டுத்தாபனங்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் வாடகை உடன்படிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாது இருந்ததுடன் வாடகை குறித்துரைத்த பிரகாரம் அறவிடப்படுகின்றமைக்கு ஏடுகளின் பிரகாரம் உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | வாடகை உடன்படிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டி இருந்ததுடன் வாடகை அறவிடல் தொடர்பான பதிவேடுகள் முறையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ஊ) | புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் ரூபா 06 மில்லியனுக்கு 1991 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 05 ஆடைத் தொழிற்சாலைகளில் மீகொடையில் அமைந்துள்ள 03 றூட் 9.4 பேர்ச் அளவான கட்டத்துடன் உடனான காணி மற்றும் களுத்துறை நாகொடையில் அமைந்துள்ள 01 றூட் 02 பேர்ச் 33.5 பேர்ச் அளவான காணியின் உரித்து கம்பனிக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஆவணங்களின் உரிமைத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக பின்னர் அந்த ஆதனங்கள் முறையே கல்வி அமைச்சிற்கும், சுகாதார மற்றும் போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சிற்கும் கையளிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | கம்பனிக்குச் சொந்தமான காணி மற்றும் ஆதனங்களை உரிய பிரகாரம் கையேற்று உரிமைத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | தலங்கமயில் அமைந்துள்ள மின் உற்பத்தி நிலையக் கட்டிடத்திற்காக | கருத்து தெரிவிக்கப்பட | குறித்துரைத்த காலத்தில் வாடகை உடன்படிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | கைச்சாத்திடப்பட்ட வாடகை உடன்படிக்கை 2016 யூன் 07 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும் மீண்டும் உடன்படிக்கை செய்யாமையின் காரணமாக 08 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் வாடகை உடன்படிக்கை இன்றி கட்டிடம் அந்த நிறுவனத்தால் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்குரிய வாடகைப் பெறுவனவுகள் சரியாக அறிக்கையிடப்படாமையால் நிலுவை வாடகைப் பணம் எவ்வளவு என இனங்காண்பதற்கு முடியாமல் இருந்தது. மேலும் இந்த ஆதனங்கள் தொடர்பான சகல ஆவணங்களையும் உள்ளடக்கிய கோவை 2022 நவம்பர் 17 ஆந் திகதி முன்னாள் கணக்காளரால் எடுத்துச் செல்லப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வில்லை. | புதிப்பதற்கும் குறித்துரைத்த பிரகாரம் வாடகை அறவிட்டு கணக்கு வைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கோவையை எடுத்துச் சென்றவர் தொடர்பாக முறையான பரிசோதனையை மேற்கொண்டு தவறு இழைத்தவருக்கு சட்ட ரீதியான தண்டணை வழங்கப்படல் வேண்டும். |
| (ஏ) | கொத்தொட்டுவயில் அமைந்துள்ள 01 றூட் 18 பேர்ச் அளவான வாடகைக் காணி ஒன்று 1975 சனவரி 01 ஆந் திகதி முதல் 50 வருட காலத்திற்காக காணி ஆணையாளரின் அங்கீகாரத்துடன் சலசல கம்பனியால் உப வாடகைக்கு பெறப்பட்டிருந்தது. அந்த உபவாடகைக்கு பெறப்பட்ட காணியின் உரித்தை கம்பனிக்கு கையேற்கப்படாது இருந்த போதிலும் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கும் கம்பனி செலவினங்களைச் செய்திருந்தது. பின்னர் காணி ஆணையாளரின் அங்கீகாரம் இன்றி 2008 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கட்டிடம் மீண்டும் உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிறுவனம் 2011 ஆம் ஆண்டின் பின்னர் வாடகை செலுத்தாது இருந்ததுடன் காணியின் உரித்து மாற்றப்பட்டிருந்ததா என உறுதிப்படுத்தி நிலுவை வாடகைப் பணம் அல்லது கட்டத்தை நிர்மானிப்பதற்காக செலவிடப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு அறிக்கை திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | வாடகை உடன்படிக்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். வாடகை உரித்தை தீர்த்து வைப்பதற்கும், நிலுவை வாடகைப் பணத்தை அறவிடுவதற்கும் கட்டங்களின் மதிப்பீட்டுப் பெறுமதியின் பிரகாரம் குறித்துரைத்த தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | கம்பனிக்குச் சொந்தமான அம்பாறையில் அமைந்துள் கட்டடம் ஒன்றின் மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்ளாமல் 2023 பெப்ரவரி 16 ஆந் திகதி முதல் 2033 பெப்ரவரி 15 வரை தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 60,000 வீதமான மாதாந்த வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடும் போது ஆதனங்களின் மதிப்பீட்டு அறிக்கை பெறப்படல் வேண்டும். |
| (ஒ) | மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான அங்குணகொலபெலஸ்ஸ இல் 01 றூட் காணி மற்றும் இரண்டு மாடிக் கட்டிடம் கண்காட்சிக் கூடத்திற்காக வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி வரையிலும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | சொத்துக்களை வினைத்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஓ) | பதுளையில் 18.5 பேர்ச் வாடகைக் காணியில் அமைந்துள் 02 கட்டிடங்கள் கலாசார அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கான ஆவனங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | காணியின் உரித்து மற்றும் கையளித்தலுக்குரிய ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஔ) | 1974 யூன் 19 ஆம் திகதி வாடகை அடிப்படையில் காணி ஆணையாளரால் வழங்கப்பட்டிருந்த குருநாகலயில் அமைந்துள்ள காணி, காணி ஆணையாளரின் அங்கீகாரம் இன்றி 2022 மார்ச் 15 ஆந் திகதி 2034 மார்ச் 15 வரையான காலப்பகுதிக்காக அரசாங்கத்தின் மதிப்பீடு இன்றி கூட்டுமுயற்சி வியாபாரத்திற்காக வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | வாடகை மதிப்பீடு ஒன்றின் அடிப்படையில் காணி ஆணையாளரின் அங்கீகாரத்தைப் பெற்று காணியை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (க) | சலுசல கம்பனியின் பிரதான அலுவலக கட்டிடத்திற்காக 2015 ஆம் ஆண்டு வரை ரூபா 323 மில்லியன் நிலுவை வாடகை செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | நிலுவை வாடகையை சரியாக இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கா) | உரித்து பிரதேச செயலாளருக்கு சொந்தமான ஜாவத்தை கட்டிடத்தில் அமைந்துள்ள களஞ்சியம் ஒன்று பிரதேச செயலாளரின் அங்கீகாரம் இன்றி கம்பனியால் மாதாந்தம் ரூபா 50,000 வாடகைக்கு 2024 யூலை 31 ஆந் திகதி முதல் மூன்றாம் | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | கட்டிடங்களை வாடகைக்கு வழங்கும் போது மதிப்பீடு செய்து கூறுவிலைகள் கோரி வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். களஞ்சியத்தில் காணப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் வாடகைக்கு வழங்கும் போது கட்டிட வாடகையை மதிப்பீடு செய்தல் மற்றும் போட்டியாளர் விலை கோரப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 150,000 ஆன 03 மாத வாடகை பாதுகாப்பு பிணைப்பணமாக திகதி இன்றிய காசோலை மூலம் பெறப்பட்டிருந்தது. மேலும் உரிய களஞ்சியம் வாடகையாளருக்கு கையளிக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது களஞ்சியத்தில் காணப்பட்ட துணி இருப்புக்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | துணிகளின் இருப்பு தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பாதுகாப்பு பிணை வைப்பு பணமாகவோ அல்லது பிணைமுறியாகவோ பெறப்படல் வேண்டும். |
| (கி) | 2023/24 ஆம் ஆண்டு வரையில் கம்பனிக்குச் சொந்தமான மற்றும் வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த 11 விற்பனை நிலையங்களுக்கு இடையே ஜாவத்தை மற்றும் நுகேகொடயில் அமைந்துள்ள விற்பனை நிலையங்கள் மாத்திரம் செயற்படு நிலையில் காணப்பட்டதுடன் 05 விற்பனை நிலையங்கள் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. ஏனைய அமைச்சுக்களுக்கு விடுவித்தல் 01 உம் மூடிப்பட்டவை 01 உம் ஆக இருந்ததுடன் 02 விற்பனை செய்யப்பட்டிருந்தது. கம்பனிக்குச் சொந்தமான உற்பத்திச் தொழிற்சாலைகள் 02 மூடப்பட்டு, 02 விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் ஏனைய அமைச்சுக்களுக்கு விடுவித்தல் 02 உம் மத்திய மாகாண புடவைக் கைத்தொழில் திணைக்களத்துடன் ஒன்றிணைந்து ஏற்படுத்தப்பட்ட 01 கூட்டுமுயற்சி திட்டமும் ஆக இருந்ததுடன் 04 தொழிற்சாலைகள் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. வாடகைக்கு வழங்கப்பட்ட தொழிற்சாலைகளில் 02 தொழிற்சாலைகள் வாடகை செலுத்தாமல் புறக்கணித்திருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | கம்பனியில் செயற்படு நிலையில் காணப்படுகின்ற விற்பனை நிலையங்களை செயற்திறனாக முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கீ) | கம்பனியின் பிரதான அலுவலகக் | கருத்து | மேற்படி |

| | | |
|---|---|---|
| கட்டிடத்திற்காக செலுத்த வேண்டிய வாடகை ரூபா 362 மில்லியன் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | தெரிவிக்கப்பட வில்லை. | |

**4.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் செலவினத்தில் 2024 மார்ச் மாதத்தின் போது தையல் பூர்த்தி செய்யப்பட்ட 879 சட்டைகள் சலுசல வியாபாரப் பெயரை இடாமல் சட்டை தைத்த நிறுவனத்தின் வியாபார பெயர் இரண்டில் வழங்கப்பட்டிருந்தது. அதில் 652 சட்டைகள் 2024 ஆகஸ்ட் மாதம் வரையிலும் காட்சிக் கூடங்களில் காணப்பட்டதுடன் சில சட்டைகள் விற்பனை செய்வதற்கு பொருத்தமான தரத்தில் காணப்படாது இருந்தமை பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | கம்பனியின் வியாபார பெயரை உடைய தரமான உற்பத்திகளின் மூலம் விற்பனை நடவடிக்கைகளை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2023/24 ஆம் ஆண்டின் போது 13 நிலையங்களில் நடாத்தப்பட்ட நடமாடும் வியாபாரக் கொட்டகைகளில் ரூபா 903,309 ஆன விற்பனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த விற்பனைகளுக்காக எடுத்துச் செல்லப்பட்ட இருப்புக்கள் மற்றும் மிகுதி இருப்புக்கள் தொடர்பான அறிக்கை வைக்கப்படாதிருந்ததுடன் மூன்று சந்தர்ப்பங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் கூட்டுமொத்தமாக ரூபா 284,510 ஆன விற்பனைகளுக்குரிய செலவினம் ரூபா 441,645 ஆக இருந்தமையால் விற்பனைகளில் இருந்து இலாபம் கிடைத்திருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | விற்பனைகளை மேற்கொள்ளும் போது கிரயத்தை மேவுகை செய்து இலாபம் பெறக் கூடிய வகையில் மேற்கொள்ளல் வேண்டும். |
| (இ) | 2022/23 ஆம் ஆண்டில் கட்டளை வழங்குதல் மூலமான விற்பனைகள் ரூபா 20,974,725 ஆக இருந்த போதிலும் 2023/24 ஆம் ஆண்டில் 31 கட்டளைகளில் இருந்து ரூபா 6,178,791 விற்பனை மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இருப்பு விற்பனை | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | விற்பனை உப திட்டங்களின் மூலம் விற்பனை வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருமானத்தில் 70 சதவீதம் வீழ்ச்சியடைந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | திணைக்களத்தில் இருந்து பல வருட காலம் முதல் கிடைத்த கட்டளைகளுக்குரிய கொள்வனவு செய்யப்பட்ட துணிகளில் எஞ்சியிருந்த துணிக் கூறுகளின் இருப்புக்களின் கூட்டுத்தொகை இரண்டு சந்தர்ப்பங்களின் போது 2800 மீற்றர் 3244 மீற்றர் ஆக முறையே ரூபா 225 இற்கும் ரூபா 160 இற்கும் விற்பனை செய்யப்பட்டிருந்தது. முதலாவது சந்தர்ப்பத்தின் போது விற்பனை செய்வதற்கு இருந்த துணி இருப்பு சரியாக இனங்காணப்படாமையினால் இரண்டாவது தடவை விற்பனை செய்த விலை முதலாவது விற்பனையினை விட மீற்றருக்கு ரூபா 65 குறைத்தமையால் ரூபா 210,885 நட்டம் ஏற்பட்டிருந்தது. மேலும் இரண்டாவது தடவை விற்பனைக்காக இரண்டு சந்தர்ப்பங்களின் போது கேள்வி அறிவித்தல் பிரசுரிப்பதற்காக ரூபா 98,244 செலவிடப்பட்டமையினால் கூட்டுமொத்தமாக ரூபா 309,129 நட்டம் ஏற்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | விற்பனைகளை சரியாக முகாமைத்துவம் செய்து மேற்கொள்ளல் வேண்டும். |
| (உ) | கம்பனியின் பிரதான இரண்டு விற்பனைக் காட்சியறைகள் ஜாவத்தை மற்றும் நுகேகொடயில் அமைந்துள்ளதுடன் நுகர்வோரைக் கவரும் வகையில் நவீன வடிவமைப்புக்களை காட்சிப்படுத்துதல் மற்றும் தற்போதுள்ள இரண்டு ஆடைக் காட்சியறைகளுக்கிடையே அல்லது பரிமாற்றல்கள் மூலம் காட்சிப்படுத்துவதற்கு தேவையான உபாயவழிகள் எடுக்காமையினால் ஒரே வடிவத்திலான துணிகள் பல வருட காலம் காட்சிப்படுத்தப்பட்டதன் காரணமாக வாடிக்கையாளர்களின் ஈர்ப்பைக் குறைத்திருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | சந்தைப்படுத்தல் நுட்பங்களைப் பயன்படுத்தி விற்பனை வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | காட்சிக்கூடப் பொறுப்பாளர்களினால் கட்டளையிடப்படுகின்ற துணிகள் பிரதான அலுவலகத்தின் காட்சியறைகளுக்குக் கிடைக்காமை, புதிய துணிகள் கொள்வனவு செய்தல் குறைவடைந்தமை, பண்டிகைக் | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | விற்பனை அதிகரித்துக் கொள்வதற்கு போட்டி உபாய வழிகளை பின்பற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காலங்களில் காட்சியறைகள் திறந்து வைக்கப்படுகின்ற திகதி மற்றும் மணித்தியால எண்ணிக்கை அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தாமையினால் காட்சியறைகளின் வியாபாரங்கள் குறைவடைவதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. | | |
| (எ) | இணையவழி விற்பனைகளை மேம்படுத்துவதற்காக 2022/23 ஆம் ஆண்டில் ரூபா 217,617 செலவினம் செய்யப்பட்டிருந்த போதும் இதுவரை இணையவழி ஊடான விற்பனைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | மேற்படி |

## 4.3 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முல்லேரியாவில் அமைந்துள்ள சதுர அடி 3,750 அளவான கட்டிடம் ஒன்று 2003 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாது இருந்ததுடன் 2022 ஒக்தோபர் 14 ஆந் திகதி தனியார் கம்பனிக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2024 செப்தெம்பர் வரையிலும் அந்தக் கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | சொத்துக்களை உச்ச அளவில் செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | பேருவளை பிரதான வீதிக்கு அருகில் காணப்படுகின்ற சதுரஅடி 8,258.4 அளவான கட்டிடத்துடன் 01 றூட் 16 பேர்ச் காணி 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் பயனற்றுக் காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | மேற்படி |
| (இ) | கம்பனியின் தையல் மற்றும் திரை துணிகள் பிரிவிற்கு உரியதாகக் காணப்படுகின்ற 74 தையல் இயந்திரங்களில் 54 இயந்திரங்கள் செயலிழந்த நிலையில் காணப்படுவதுடன் 2022/23 ஆம் ஆண்டின் போது ரூபா 194,410 செலவில் 20 இயந்திரங்கள் பழுது பார்க்கப்பட்டிருந்தது. எனினும் அந்த உற்பத்தி செயற்பாடுகளுக்கு பயன் படுத்துவதற்கான வேலைத் திட்டம் ஒன்று | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | கம்பனிக்கு சொந்தமான சொத்துக்களில் இருந்து உச்ச அளவில் பயன்படுத்துவதற்கும் வருமானத்தை உழைப்பதற்கும் பொருத்தமான வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தயாரிக்கப்படாமையினால் விளைவற்றுக் காணப்பட்டது. | | |
| (ஈ) | சுயவிருப்பில் ஊழியர் ஓய்வு பெற்றுச் சென்றதின் கீழ் 2016 ஆம் ஆண்டின் போது இழப்பீடு மற்றும் ஊழியர் பணிக்கொடை செலுத்தும் போது தவறாகக் கழிக்கப்பட்ட தொகை மீண்டும் செலுத்துமாறு கோரி அந்த திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்றுச் சென்ற ஊழியர் ஒருவர் நடுவர் பிரிவு மற்றும் தொழில் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தார். 2023/24 ஆம் ஆண்டின் போது அந்த வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் அவ்வாறு குறைக்கப்பட்ட 219,137 தொகையை மீண்டும் செலுத்துவதற்கு கம்பனிக்கு ஏற்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | இழப்பீடு மற்றும் பணிக் கொடைகள் பிழையான முறையில் கணிப்பிடுவதற்கும் மற்றும், செலுத்துவதற்கும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் நட்டம் அறவிடப்படல் வேண்டும். |